தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4032, Homebush NSW 2140

www.tsch.org.au **homebushtsch@gmail.com**

ஆண்டிறுதிப் பரீட்சை 2025

ஆண்டு: 9 திகதி: 29/11/2025

நேரம்: 02:30 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திரு. ச. தேவராசா

மாணவர் பெயர்: _____

வினாக்கள்	**வினா புள்ளி**	**பெற்ற புள்ளி**
வினா 1	10	
வினா 2	10	
வினா 3	20	
வினா 4	20	
வினா 5	20	
வினா 6	20	
மொத்தப் புள்ளிகள்	**100**	

வினா இல	1	புள்ளிகள்	10	பக்கம்	2

கேட்டுக் கிரகித்தல்

1. எந்தத் தொலை தொடர்புச் சாதனத்தின் மூலம் உரையாடல் நடைபெறுகின்றது? (2 புள்ளிகள்)

_____

2. இந்த உரையாடலில் பங்குபற்றுபவர்கள் யாவர்?
இந்த உரையாடலை மேற்கொள்வதற்கான காரணம் யாது? (2 புள்ளிகள்)

_____

_____

3. வளர்மதியின் பலங்கள் எவை? பலவீனங்கள் எவை? (2 புள்ளிகள்)

_____

_____

_____

_____

4. அரையாண்டுப் பரீட்சையின் பின்பே பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு அவசியமானது. ஆண்டிறுதிப் பரீட்சையின் பின்பு அவசியமில்லை. இக்கூற்று சரியா? பிழையா? காரணங்கள் எழுதுக. (4 புள்ளிகள்)

_____

_____

_____

_____

_____

வினா இல	2	புள்ளிகள்	10	பக்கம்	3

பின்வரும் சொற்கள் பெயராகவும், வினையாகவும் வருமாறு ஆறு சொற்களுக்குக் குறையாது வாக்கியங்கள் எழுதுக.

1. படி (பெயர்)

_____

படி (வினை)

_____

2. அறை (பெயர்)

_____

அறை (வினை)

_____

3. மதி (பெயர்)

_____

மதி (வினை)

_____

4. ஓடு (பெயர்)

_____

ஓடு (வினை)

_____

5. வழி (பெயர்)

_____

வழி (வினை)

_____

வினா இல	3	புள்ளிகள்	20	பக்கம்	4

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

மரங்கள்

உயரமாக வளர்ந்து, பசுமையான இலைகளைப் பரப்பி கம்பீரமாகக் காட்சியளிக்கின்ற மரங்கள் கண்களுக்கு குளிர்ச்சியைக் கொடுக்கின்றன. மாமரம், பலாமரம், வாழைமரம், அப்பிள் மரம் போன்ற மரங்கள் கனி தரும் மரங்களாக விளங்குகின்றன. இவற்றுள் வாழை மரத்தைத் தவிர ஏனைய மரங்கள் காலத்திற்குக் காலம் சுவையான பழங்களைத் தருகின்றன. ஆனால் வாழைமரம் ஒரு தடவை மட்டும் பயன் தருகின்ற மரமாகும். வாழை மரம் ஈன்ற வாழைக்குலை பழுத்த பின்பு அந்த வாழைக் குலையை வெட்டியபின்பு வாழை மரத்தையும் வெட்டி விடுவார்கள்.

ஆல மரம், அரச மரம், வேப்ப மரம் போன்ற மரங்கள் நிழல் தரும் மரங்களாகும். இவற்றில் ஆலமரம் கிளைகளைப் பரப்பி மிகவும் பெரிய மரமாக வளரும். அந்தக் கிளைகளைத் தாங்குவதற்காக விழுதுகள் எனப்படும் தூண்கள் போன்ற அமைப்பைக் கொண்டுள்ளமை ஆலமரத்தின் சிறப்பியல்பாகும். ஆலமரத்தின் தடிகளை வெட்டி அவற்றினால் பல்துலக்கும் போது அத்தடிகளில் உள்ள பால் பற்களை இறுக்கமாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்கின்றது. வேப்பந்தடிகளினால் பல் துலக்கினால் அவை பற்களுக்கிடையில் உள்ள கிருமிகளை அழித்து பற்களின் ஆரோக்கியத்திற்கு உதவுகின்றன.

இலங்கையின் வடக்கிலுள்ள யாழ்ப்பாணத்திலும், இந்தியாவில் தமிழ்நாட்டிலும் அதிகளவில் காணப்படுகின்ற பனைமரங்களிலிருந்து பனம் பழம், நுங்கு, பனங்கிழங்கு, ஒடியல், புழுக்கொடியல், கருப்பநீர், பனங்கட்டி போன்ற பல்வேறு உணவுப் பொருள்களை / பயன்களை மக்கள் பெறுவதனால் பனைமரம் "கற்பக தரு", அதாவது கேட்டதைக் கொடுக்கும் மரம் என்று சிறப்பித்துக் கூறப்படுகின்றது. தென்னை மரம் இளநீரையும், தேங்காயையும் தருகின்றது. மரங்களால் மழைவீழ்ச்சி ஏற்படுகின்றது. மரங்களிலிருந்து வெளியேற்றப்படுகின்ற பிராணவாயு மக்கள் உயிர்வாழ உதவுகின்றது. மரங்களை வளர்ப்போம், மகிழ்ச்சியாக வாழ்வோம்.

1. பழங்களைத் தருகின்ற 5 மரங்களை எழுதுக. (5 புள்ளிகள்)

_____

_____

2. கனி தரும் மரங்களில் வாழை மரம் எவ்வாறு வேறுபடுகின்றது? (5 புள்ளிகள்)

_____

_____

_____

_____

3. பற்களின் ஆரோக்கியத்திற்கு உதவுகின்ற இரண்டு மரங்கள் எவை?
எவ்வாறு அவை பற்களின் ஆரோக்கியத்துக்கு உதவுகின்றன? (5 புள்ளிகள்)

_____

_____

_____

_____

4. பனைமரம் கேட்டதைக் கொடுக்கும் "கற்பக தரு" என்று சிறப்பித்துக் கூறப்படுவதற்கான காரணம் என்ன? (5 புள்ளிகள்)

_____

_____

_____

வினா இல	4	புள்ளிகள்	20	பக்கம்	6

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

தமிழர்களின் கட்டடக் கலை

தமிழ்மக்கள் ஓவியக் கலை, சிற்பக் கலை, கட்டடக் கலை, இசைக் கலை, நடனக் கலை, நாடகக் கலை,போன்ற கலைகளில் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்து வருகின்றனர் என்பதை வரலாறு கூறுகின்றது. இவற்றில் தமிழர்களின் கட்டடக் கலை என்பது தமிழ் மன்னர்கள் அரண்மனைகளைக் கட்டியதிலிருந்து ஆரம்பிக்கின்றது என்று சங்ககால இலக்கியமான நெடுநல்வாடை கூறுகின்றது.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு திருச்சி நகரத்திற்கு அண்மையில் பாய்ந்து வருகின்ற காவிரி நதி நீரை மறித்து கரிகால்ச் சோழ மன்னன் கட்டிய கல்லணை, வெளிநாட்டுப் பொறியியல் நிபுணர்களை வியப்பில் ஆழ்த்தி இன்றும் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. பாறைகளை வரிசையாகக் குறுக்காகப் போட்டு அவை நீரில் அமிழ்ந்து போக, அதன் மேல் பாறைகளைப் போட்டு பல அடுக்குகளான பாறைகளை நீரில் கரையாத சாந்தினால் இணைத்து கரிகாலன் இக்கல்லணையைக் கட்டியதாக வரலாறு கூறுகின்றது. 250 வருடங்களுக்கு முன்பு காவிரி ஆற்றை மறித்து முக்கொம்பு என்ற இடத்தில் ஆங்கிலேயர் கட்டிய அணை சுமார் 15 வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் அடித்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆயிரத்து முந்நூறு வருடங்களுக்கு முன்பு மாமல்லன் என்ற பட்டப் பெயரினால் அழைக்கப்பட்ட நரசிம்ம பல்லவன் காலத்தில் பாறைகளைக் குடைந்து அமைக்கப்பட்ட மகாபலிபுரம் கடற்கரைக் கோயிலும் தமிழ்க் கட்டடக் கலை வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகின்றது.

ஆயிரம் வருடங்களுக்கு முன்பு தஞ்சாவூரில் ராஜ ராஜ சோழனால் நிர்மாணிக்கப்பட்ட தஞ்சைப் பெருவுடையார் கோயில் பார்க்கின்றவர்களை வியப்பில் ஆழ்த்தும் கட்டடக் கலை அம்சங்களைக் கொண்டதாக இன்றும் கம்பீரமாகக் காட்சியளிகின்றது. 216 அடிகள் உயரமான இக்கோயிலின் கோபுரத்தின் உச்சியில் 80 தொன் எடையுள்ள ஒரு பாறையை வைத்துள்ளார்கள். கட்டடக் கலை ஆராய்ச்சியாளர்களை வியப்படைய வைக்கும் விடயமாக இது பார்க்கப்படுகிறது. தஞ்சாவூருக்கு அண்மையில் கங்கை கொண்ட சோழபுரம் என்ற இடத்தில் ராஜ ராஜ சோழனின் மகன் ராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட கங்கை கொண்ட சோழபுரம் சிவன் கோயிலும் தமிழர்களின் கட்டடக் கலை வரலாற்றில் பிரதானமாகத் திகழ்கின்றது. சில மாதங்களுக்கு முன்பு ராஜேந்திர சோழனின் ஆயிரமாவது பிறந்தநாளில் இந்தியப் பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்கள் கங்கை கொண்ட சோழ புரத்திற்குச் சென்று விழாக் கொண்டாடியமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த இரண்டு கோயில்களும் ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, கலாசார நிறுவனத்தினால் புராதன சின்னங்களாக அங்கீகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

1. தமிழர்கள் தேர்ச்சி பெற்ற 5 கலைகளை எழுதுக. (5 புள்ளிகள்)

_____

_____

2. 2000 வருடங்களுக்கு முன்பு கரிகாலன் கட்டிய கல்லணை இன்றும் நிலைத்து நிற்பதற்கான காரணத்தை விளக்குக. (5 புள்ளிகள்)

_____

_____

_____

_____

_____

3. தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் கோபுரமும் அதன் உச்சியில் வைக்கப்பட்டுள்ள 80 தொன் எடையுள்ள பாறையும் ஏன் ஆராய்ச்சியாளர்களை ஆச்சரியப்படுத்தும் விடயமாக விளங்குகிறது? (5 புள்ளிகள்)

_____

_____

_____

_____

_____

_____

4. சில மாதங்களுக்கு முன்பு கங்கை கொண்ட சோழபுரம் செய்திகளில் முக்கியத்துவம் கொடுத்துப் பேசப்பட்டதன் காரணம் யாது? (5 புள்ளிகள்)

_____

_____

_____

_____

_____

வினா இல	5	புள்ளிகள்	20	பக்கம்	8

உங்களை ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தின் செயலாளர் என்று கருதிக்கொள்ளுங்கள். எதிர்வரும் 20.12.2025 சனிக்கிழமை அன்று கல்வி நிலையத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நடைபெறவுள்ளது. விழாவில் இடம்பெறும் நிகழ்ச்சிகளை விளக்கி பிரதம விருந்தினராகக் கலந்து விழாவைச் சிறப்பிக்குமாறு ஸ்ராத்பீல்ட் நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ ஜேசன் லீ அவர்களுக்கு ஜேசன்லீ@ஜிமெயில்.கொம் என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு மின்னஞ்சல் எழுதுக.

வினா இல	6	புள்ளிகள்	20	பக்கம்	10

பின்வருவன வற்றில் ஒன்றைப் பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.

1. கல்வியா? செல்வமா? சிறந்தது என்ற ஒரு விவாத அரங்கம் நடைபெறவுள்ளது. நீங்கள் கல்வியே சிறந்தது என்று உரையாற்றவுள்ளீர். அதற்காகத் தயாரித்த பேச்சினை எழுதுக.

2. அன்று சனிக்கிழமை இரவு உணவு உண்ட பின்பு விண்வெளியில் பிரயாணம் பற்றிய திரைப்படம் ஒன்றைப் பார்த்த பின்பு நள்ளிரவில் படுக்கையில் விழுந்து உறக்கத்தில் ஆழ்ந்தேன். கண் விழித்தபோது ஒரு விண்கலத்தில் (space craft) விண்வெளி வீரர்களுக்குரிய உடையணிந்து அந்தரத்தில் பறந்துகொண்டிருந்தேன். .....

3. தந்தையர் தினம் பற்றிய ஒரு தகவல் கட்டுரை எழுதுக.